1975 நவம்பர் 12]

துறைமுகம் அமைப்பதற்கு கூடுதலான பணம் ஆகும் என்றும், அதற்கு மிக அருகாமையில் தூத்துக்குடியில் ஒரு மீன்பிடி துறைமுகம் ஏற்கெனவே அமைக்கப்பட்டுவிட்டதால் இந்த இடத்தில் மற்றொரு மீன்பிடி துறைமுகம் தேவையற்றது, வீண் செலவாகும் என்று இந்த முயற்சி கைவிடப்பட்டு விட்டது.

உடல் ஊனமுற்றோருக்குப் பயிற்சித் திட்டம்.

*330 வினு—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு சமூக நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடல் ஊனமுற்றோர் புதுவாழ்வுத் திட்டத்தின்கீழ் பயிற்சித் திட்டம் ஏதேனும் கும்முடிப்பூண்டி வட்டாரத்திலும், எல்லாபுரம் வட்டாரத்திலும் அமைக்கும் செயற்குறிப்பு ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணுமலை: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, முட்டுக்காடு போன்ற பகுதியில் தொழில்பேட்டை அமைந்து உள்ளது பெரும் பயன் தருவதாக உள்ளது. அந்த அளவிற்கு மிகப் பெரிய அளவில் இல்லாவிட்டாலும், சிறிய அளவில் இந்தப் பகுதியில் தொழிற் பயிற்சிக் கூடங்கள் அமைப்பதற்கு எதிர்காலத்தில் இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணுமலை: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை அரசு ஆய்வு செய்யும்.

செவிடர்களுக்கான பள்ளி.

*331 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு சமூக நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், தஞ்சை மருத்துவக் கல்லூரி அருகே நீலகிரி என்னும் இடத்தில் செவிடர் பள்ளி ஒன்று அமைத்திட அரசு உத்தேசித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணுமலை: (அ) & (இ) இல்லை.